**ARTICLE 25 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00028**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 142–150
Received: 30 September 2026 • Accepted: 1 October 2026

# சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டில் பண்பாட்டுப் பதிவுகள்

## Cultural Records in the Worship of Sadhu Chidambara Swamigal

**தங்கத்துரை சொ[1,*], முனைவர் .இலக்குவன் இரா[2]**

[1]பதிவு எண்-23211074021002 முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், வெ.ப.சு.தமிழியல் ஆய்வு மையம், ம.தி.தா.இந்துக்கல்லூரி,திருநெல்வேலி- 627 010. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக இணைவு பெற்றது , திருநெல்வேலி- 627 012, India

[2]உதவிப்பேராசிரியர், வெ.ப.சு.தமிழியல் ஆய்வு மையம், ம.தி.தா.இந்துக்கல்லூரி,திருநெல்வேலி- 627 010 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக இணைவு பெற்றது , திருநெல்வேலி- 627 012, India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** தங்கத்துரை சொ — ctdurai85@gmail.com

### Abstract

In the folk religious tradition of Tamil Nadu, Siddhar worship and Guru worship hold an important place. The aim of this research is to examine from a cultural perspective, the worship tradition of Sadhu Chidambara Swamigal, who is widely worshipped in the southern districts and surrounding areas such as Salem, Coimbatore, Erode. Sadhu Chidambara Swamigal was a religious reformer and a Jnana Guru who alleviated the sufferings of the people. His worship embodies cultural elements such as Annadhanam (food offering), equality, Saiva principles, devotion to the Guru, and a life in harmony with nature. His ancestor worship, healing practices, Amavasya worship, Guru Pooja, and the votive offerings of the Thondar Kula People stand as cultural identities of the Tamils. This research is based on fieldwork and interview methods. Oral information obtained from the people of the Thondar Kula, the practices observed at worship centers, songs, and methods of worship have been used as primary data. Through this, this article reveals that the worship of Sadhu Chidambara Swamigal is not merely a religious event, but a cultural record that proclaims the culture, ethics, and social unity of Tamil society.

### ஆய்வுச் சுருக்கம்

தமிழகத்தின் நாட்டுப்புற சமய மரபில் சித்தர் வழிபாடும், குரு வழிபாடும் முக்கிய இடம் பெறுகின்றன. தென் மாவட்டங்கள் மற்றும் சேலம், கோவை, ஈரோடு போன்ற சுற்றுவட்டாரப் பகுதிகளில் வழிபடப்படும் சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டு மரபைப் பண்பாட்டு நோக்கில் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். சாது சிதம்பர சுவாமிகள் ஒரு சமய சீர்திருத்தவாதியாகவும், மக்களின் துயர் துடைத்த ஞானகுருவாகவும் விளங்கியவர். அவரது வழிபாட்டில் அன்னதானம், சமத்துவம், சைவ நெறி, குரு பக்தி, இயற்கையோடு இயைந்த வாழ்வியல் போன்ற பண்பாட்டுக் கூறுகள் பொதிந்து கிடக்கின்றன. அவரது முன்னோர் வழிபாடு, மருத்துவம், அமாவாசை வழிபாடு, குருபூஜை வழிபாடு, தொண்டர் குல மக்களின் நேர்த்திக்கடன்கள் ஆகியவை தமிழரின் பண்பாட்டு அடையாளங்களாகத் திகழ்கின்றன. இவ்வாய்வு கள ஆய்வு மற்றும் நேர்காணல் முறையில் அமைகிறது. தொண்டர் குல மக்களிடம் பெறப்பட்ட வாய்மொழித் தகவல்கள், வழிபாட்டுத் தலங்களில் காணப்படும் நடைமுறைகள், பாடல்கள் மற்றும் வழிபாட்டு முறைகள் ஆகியவை முதன்மைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் வழி, சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாடு வெறும் சமய நிகழ்வாக மட்டுமின்றி, தமிழ்ச் சமூகத்தின் பண்பாடு, ஒழுக்கவியல், சமூக ஒற்றுமை ஆகியவற்றைப் பறைசாற்றும் ஒரு பண்பாட்டுப் பதிவாக விளங்குகிறது என்பதை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** சாது சிதம்பர சுவாமிகள்; முன்னோர் வழிபாடு; பசு; யானை வழிபாடு; மருத்துவம்; பண்பாடு.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** சொ, த., & இரா, மு. . (2026). சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டில் பண்பாட்டுப் பதிவுகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

தமிழர் வாழ்வியல் என்பது இயற்கையோடும் இறைமையோடும் இணைந்த ஒரு பண்பாட்டு வெளிப்பாடாகும். உணவு, உடை, மருந்து, வழிபாடு என அனைத்திலும் தமிழரின் அறிவியல் பார்வையும் பண்பாட்டுக் கூறுகளும் பின்னிப் பிணைந்துள்ளன. சங்க இலக்கியங்கள் காட்டும் வேளாண் மரபும், சிறுதானிய உணவு முறையும்,மூலிகை மருத்துவ அறிவும் இன்றளவும் தொடரும் வாழும் மரபுகளாகும்.

அந்த வகையில் சுவாமிகளின் கொள்கையைப் பின்பற்றி வாழும் தொண்டர் குல மக்களால் போற்றி வழிபடப்படும் சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டு மரபு, தமிழ்ப் பண்பாட்டின் தொடர்ச்சியாக விளங்குகிறது. சுவாமிகளின் பண்பாட்டில் நிகழ்த்தப்படும் கூழ் பூஜை, கும்பம் ஏற்றுதல், ஜோதி வழிபாடு, முன்னோர் வழிபாடு, நினைவுச்சின்ன வழிபாடு, பிரசாதம் வழங்குதல் போன்ற ஒவ்வொரு நிகழ்வும் வெறும் சடங்காக மட்டுமின்றி, தமிழரின் உணவுப் பண்பாடு, மருத்துவப் பண்பாடு ஆகியவற்றின் பதிவுகளாக அமைந்துள்ளன. எனவே சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டு நிகழ்வுகளைக் கள ஆய்வின் மூலம் அணுகி, அதில் பொதிந்துள்ள பண்பாட்டுப் பதிவுகளை ஆவணப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## சாது சிதம்பர சுவாமிகள்

தூத்துக்குடி மாவட்டம், திருநெல்வேலி - தூத்துக்குடி நெடுஞ்சாலையில், திருநெல்வேலியிலிருந்து 18 கி.மீ தொலைவில் உள்ள ஊர் வல்லநாடு. வல்லநாட்டில் இருந்து 1 கி.மீ. தூரத்தில்; பாறைக்காடு என்ற ஊர் அமைந்துள்ளது. சண்முக சாது என்ற நாட்டு மருத்துவருக்கும், உலகம்மையாருக்கும் மகனாய்ப் பிறந்தவர் சாது சிதம்பர சுவாமிகள் ஆவார். இவர் 1922 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இருபதாம் நாள், தீபாவளி அன்று பிறந்தவர். சிதம்பரம் இரண்டாம் வகுப்பு வரையே பள்ளிப்படிப்பு படித்துள்ளார். இவர் வள்ளலாரின் கொள்கையைப் பின்பற்றி வந்தார்.

## பண்பாடு

பண்பாடு என்பது ஒரு இலக்கியக் கருப்பொருள். இதற்குப் பல நிலைகளில் வரையறை உண்டு. ஒரு குழுவின் வரலாறு, போக்குகள், பண்புகள், புரிந்துணர்வுகள், வாழ்வியல் வழிமுறைகள், சமூக கட்டமைப்பு என்பனவற்றைச் சுட்டி நிற்கின்றது. மற்றொரு நிலையில் மொழி, உணவு, இசை, சமய நம்பிக்கைகள், தொழில்சார் தெரிவுகள், கருவிகள் போன்றவை பண்பாட்டுக்குள் அடங்கும். **“பண்பாடு மனிதர்களுடைய மொழி, எண்ணங்கள், நம்பிக்கைகள், வழக்கங்கள், தடைகள், விதிமுறைகள், நிறுவன அமைப்புகள், கருவிகள், செயல்முறைகள், காலப்பொருட்கள், சடங்குகள், விழாக்கள், அடையாளச் சின்னங்கள் போன்ற எல்லா அம்சங்களும் கலந்திருக்கும் ஒரு கலவையாகும்.”1 (1998:115)**

## முன்னோர் வழிபாடு

“வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்து தமது முன்னோர்களையும், தாய் தந்தையரையும் போற்றும் நோக்கில் மனிதன் அவர்களைத் தெய்வமாக வணங்கத் தொடங்கினான். அவர்கள் நன்மைகளைச் செய்து தம்மை காப்பதாகவும் நம்பினான். இதன் விளைவாகத் தோன்றியதே முன்னோர் வழிபாடு ஆகும். முன்னோர் வழிபாட்டிற்கு ஆவி பற்றிய நம்பிக்கையே அடிப்படை என்று கூறப்படுவதும் உண்டு.”2 (2007:120)

**“பல குடும்பங்களில் முன்னோர்களை ஆண்டுக்கு ஒரு நாள் நினைத்து வழிபடுகின்றனர். அவர்கள் பயன்படுத்திய பொருள்களைப் பேணி வைத்திருந்து அவற்றுக்கும் தனி மதிப்புக் கொடுப்பது வழக்கமாக உள்ளது.”3 (1981:51)** சாது சிதம்பர சுவாமிகளின் நினைவாலயத்தில், அவர்தம் சித்தப்பாவிற்கு சமாது வைக்கப்பட்டு, தொடர்ந்து வழிபாடு நடைபெற்று வருகிறது.

நாள்தோறும் நடைபெறும் நித்திய பூஜையில், காலை வேளையில்; கேழ்வரகு கூழும், நண்பகலில் சுத்த அன்னமும் நிவேதனமாகப் படைக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் நடைபெறும் சுவாமிகளின் தாய், தந்தையார் குருபூஜை நாளன்று பால், பஞ்சாமிர்தம், சர்க்கரைப்பொங்கல் ஆகியவை படைக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது. ஆனால் இவருக்கென்று தனியாகக் குருபூஜை விழா நடைபெறுவது இல்லை என்பது குறிப்பிடத்தக்கச் செய்தியாகும்.

## யானை, பசு வழிபாடு

சாது சிதம்பர சுவாமிகளின் நவக்கிரக ஜோதி வழிபாடு, அமாவாசை வழிபாடு, குருபூஜை வழிபாடு, 108 மற்றும் 1008 ஜோதி வழிபாடு முதலிய வழிபாடுகள்நடைபெறுகின்றன. இவ்வழிபாடுகளில் முதன்மையாக இடம் பெறுவது பசு வழிபாடு, யானை வழிபாடு ஆகும்.

முதலில் யானையை நீராட்டி, பன்னீர் தெளித்து, சந்தனம், குங்குமம் கொண்டு நான்கு பாதங்களிலும் வால் பகுதியிலும் திலகமிடப்படுகிறது. பின்னர் துண்டு, வேட்டி போன்ற ஆடைகள் அணிவிக்கப்பட்டு, 108 எலுமிச்சம் பழ மாலை, எருக்கம்பூ மாலை, அருகம்புல் மாலை, துளசி மாலை, பூ மாலை உள்ளிட்ட மாலைகள் சூட்டப்படுகின்றன. தொடர்ந்து வெண்பொங்கல், சர்க்கரைப்பொங்கல், அப்பம், பொரி, மோதகம், கடலை, கொழுக்கட்டை, அவல், வெல்லம், கற்கண்டு, கரும்பு, வாழைப்பழம் ஆகிய நிவேதனங்கள் யானைக்கு ஊட்டப்பட்டு, தீபம் ஏற்றி வலம் வருதலுடன் இவ்வழிபாடு நிறைவு பெறுகிறது. இத்தகைய நடைமுறை, மனிதனும் விலங்கும் இணைந்த பண்பாட்டு மரபையும், கணபதி வழிபாட்டின் தொன்மையான வழக்காற்றையும் பதிவு செய்யும் சிறந்த பண்பாட்டுப் பதிவாகத் திகழ்கிறது. இவ்வழிபாட்டு முறையே பசுக்கும் நடைபெறுகிறது.

## நாக வழிபாடு

**“பாம்புகளால் நிலம் வளம் பெறுகிறது என்றும், பாம்புகளை வழிபடுவதால் தங்கள் குடும்பத்தில் செல்வ வளம் பெருகி நிலைக்கும் என்றும் மக்களிடையே நம்பிக்கை நிலவுகிறது.”4(1981:59)** அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் கோயில், குளக்கரை அல்லது அரச மரத்தடி போன்ற இடங்களில் பாம்பு வடிவம் செதுக்கப்பட்ட கற்கள்

நடப்பட்டு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. நாகராஜாவைத் தெய்வமாக வழிபாடும் வழக்கம் காலம் காலமாகத் தொடர்ந்து வருகிறது.

இம்மரபின் தொடர்ச்சியாகவே சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டு மரபில் நாக வழிபாடு சிறப்பிடம் பெறுகிறது. அதற்குச் சான்றாக, அருள் ஆனந்த செந்தில் விநாயகப் பெருமான் ஆலயத்தில் பாம்பு வடிவம் செதுக்கப்பட்ட கற்கள் காணப்படுகின்றன. இது மண்ணையும் மரபையும் மனித நம்பிக்கையையும் இணைக்கும் தொன்மையான பண்பாட்டுப் பதிவாகத் திகழ்கிறது.

## காகம்

“வைதீகமாக உள்ளவர்கள் அல்லது ஆசாரங்களைக் கடைப்பிடிப்பவர்கள் தாங்கள் சாப்பிடுவதற்கு முன் காகத்துக்கு ஒரு வாய்ச் சோறு படைப்பார்கள். ஏதாவது ஒரு மேடைமீது சோற்றை வைத்துத் தெருதோறும் ‘கா, கா’ என்று உரத்த குரலில் அழைப்பவர்களும் உண்டு. காகத்துக்குச் சோறு இடுவது இறந்துபோன ஆன்மாக்களுக்கு மகிழ்ச்சி தரும் என்பர். காகம் சனி பகவானுடைய வாகனமாக இருப்பதால் குறிப்பாக, சனிக்கிழமைகளில் காகங்களுக்குச் சோறு படைக்கும் பழக்கம் பரவியிருக்கிறது.”5 (1981:58)

இத்தகைய தொன்மையான மரபின் தொடர்ச்சியாகவே சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டிலும் காகத்திற்கு உணவு வைக்கும் பழக்கம் காணப்படுகிறது. குறிப்பாக, பூச நட்சத்திர வழிபாடு, குருபூஜை வழிபாடு போன்ற வழிபாட்டு நாட்களில் மதிய பூஜையில் சுத்த அன்னம் படைக்கப்படுகிறது. அந்த அன்னத்தினைக் காகம் உண்பது மரபாகக் கருதப்படுகிறது.

காகத்திற்கு உணவிடுவது பித்ருக்களை மகிழ்விக்கும் செயலாகவும், சனிதோஷம் நீக்கும் பரிகாரமாகவும் நம்பப்படுகிறது. இது மனிதர் மட்டுமின்றி பிற உயிர்களோடும் உணவைப் பகிரும் தமிழரின் உயிர் இரக்கப் பண்பை வெளிப்படுத்துகிறது. இத்தகைய தொன்மையான மரபின் நீட்சியாகவே சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டில் அன்னம் காகத்திற்குப் படைக்கப்படுகிறது.

## கருடன்

சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டில் மாதந்தோறும் அமாவாசை ஜோதி வழிபாடு நடைபெறுகிறது. அமாவாசை நாளன்று மாலை வேளையில் நடைபெறும் அமாவாசை ஜோதி வழிபாட்டின் போது கருடன் வட்டமிடுவது மிகவும் சிறப்பாகக் கருதப்படுகிறது. கருடன் விஷ்ணுவின் வாகனம். எந்த இடத்தையாவது கருடன் வட்டமிட்டால் அந்த இடம் புனிதமாகி விடுகிறது என்பது நம்பிக்கை. எனவே அமாவாசை ஜோதி வழிபாட்டு நேரத்தில் கருடன் தோன்றுவது சுவாமிகளின் அருளாசி கிடைத்ததற்கான அடையாளமாக தொண்டர் குல மக்களால் கருதப்படுகிறது.

## மருத்துவம்

சித்த மருத்துவம் தமிழர் பெற்ற அரிய மருத்துவச் செல்வமாகும். இம்முறையைத் தோற்றுவித்த சித்தர்கள் அட்டமா சித்திகள்

கைவரப்பெற்றவர்களாகவும், இறையருள் பெற்ற ஞானிகளாகவும் வரையறுக்கப்படுகின்றனர்.

இம்மரபின் நீட்சியாக சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டு முறையிலும் மருத்துவக் கூறு உள்ளடங்கியுள்ளது. குறிப்பாக, நீர், அருகம்புல், துளசி ஆகியன கலந்த தீர்த்தம் வழிபாட்டில் முதன்மைப்படுத்தப்படுகிறது. இத்தீர்த்தத்தின் வழி பல்வேறு நோய்கள் குணமானதாகக் கள ஆய்வில் தொண்டர்குல மக்கள் தெரிவிக்கின்றனர். துளசி, அருகம்புல் போன்ற மூலிகைகளைத் தீர்த்தமாக்கி வழங்குவதன் மூலம் தமிழரின் பாரம்பரிய மருத்துவ அறிவு இன்றும் சுவாமியின் வழிபாட்டின் வழி உயிர்ப்புடன் பேணப்படுகிறது என்பது புலனாகிறது.

நினைவுச் சின்ன வழிபாடு

## ஒற்றைக்கொம்பு யானையின் சிரசு

தமிழர் பண்பாட்டில் இறந்த முன்னோர்கள், தியாகிகள், தெய்வீகத் தன்மை பொருந்திய விலங்குகள் ஆகியவற்றின் நினைவாக அவற்றின் எச்சங்களையோ, அடையாளங்களையோ வைத்து வழிபடும் மரபு நெடுங்காலமாக உள்ளது. இது நடுகல் வழிபாட்டின் நீட்சியாகும்.

சதுரகிரியில் எழுந்தருளியுள்ள சுந்தர மகாலிங்கத்திற்கு 'ஒற்றைக்கொம்பு' என்னும் யானை 1900-ஆம் ஆண்டு முதல் 1971-ஆம் ஆண்டு வரை தன் இறுதிக் காலம் வரை பூசை செய்து வந்ததாகச் செவிவழிச் செய்தி நிலவுகிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் அங்குக் கல்வெட்டும், ஒற்றைக்கொம்பு யானை பூஜை செய்யும் ஓவியமும் காணப்படுகின்றன. அந்த யானை உயிர் துறந்த பின்னர், அதன் இடது தந்தத்தைப் பக்தர்களின் தரிசனத்திற்காக 24.08.1971 அன்று சாது சிதம்பர சுவாமிகள் பிரதிஸ்டை செய்தார். பின்னர் ஒற்றைக்கொம்பு யானையின் சிரசு தூத்துக்குடி மாவட்டம் பாறைக்காடு அருள் ஆறுதல் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. தினமும் காலை பூசையில் கேழ்வரகு கூழும், மதிய பூசையில் சுத்த அன்னமும் படைக்கப்பட்டு வழிபாடு நடைபெற்று வருகிறது.

இவ்வாறு இறைப்பணி புரிந்த உயிரைத் தெய்வமாக மதித்து, அதன் உடல் எச்சத்தைப் பாதுகாத்து வழிபடுவது தமிழரின் நன்றியுணர்வு சார்ந்த பண்பாட்டு மரபாகும். இதுமட்டுமின்றி சுவாமிகள் யானைக்கு கேழ்வரகுக் கூழ் படைப்பது சித்தர் மரபின் எளிய உணவு முறையையும், மனிதன்-விலங்கு இடையிலான பிணைப்பையும் வெளிப்படுத்துகிறது.

## மணிகண்டன் யானையின் தந்தம்

சங்க காலத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டனர். குறிஞ்சி நில மக்கள் வேட்டையாடுதலையும், கான் பொருள் சேகரித்தலையும் தொழிலாகக் கொண்டிருந்தனர். குறிஞ்சி நிலக் கடவுளான முருகப் பெருமானின் வழிபாட்டில் யானையின் தந்தங்களுக்குத் தனி இடம் இருந்துள்ளது. சங்க இலக்கியமான திருமுருகாற்றுப்படையில் (வரி219-222), குன்றகப் பெண்டிர் வெறியாட்டு வழிபாட்டின் போது, வேட்டையாடிப் பெற்ற பெரிய யானையின் தந்தங்களைக் களத்தில் நட்டு, அவற்றின் மீது பூமாலைகளைத் தொங்கவிட்டு, மலர் தூவி, நறுமணப் புகை காட்டி வழிபட்ட செய்தி குறிப்பிடப்படுகிறது.

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

வெ. சங்கரபாண்டியன் எழுதிய வல்லநாட்டுச் சித்தர் சாது சிதம்பர சுவாமிகள் வரலாறு என்ற நூலில், சாது சிதம்பர சுவாமிகள் தமது வழிபாட்டுத் தேவைக்காகத் தொண்டர்குல மக்கள் மூலம் கேரளாவிலிருந்து யானை ஒன்றை வாங்கி வளர்த்ததாகவும், அதற்கு ‘மணிகண்டன்’ எனப் பெயரிட்டு அழைத்ததாகவும் குறிப்பிடப்பிடப்பட்டுள்ளது. சுவாமிகளின் தலைமையில் நடைபெறும் அனைத்து வழிபாட்டிலும் மணிகண்டன் யானை கலந்து கொள்வது வழக்கமாகும். பின்னர் மணிகண்டன் யானை வயது முதிர்ந்த காரணத்தால் புரட்டாசி மாதம் 10-ஆம் தேதி, உத்திரட்டாதி நட்சத்திரத்தன்று காலமானது. மணிகண்டனுக்குச் சாது சிதம்பர சுவாமிகளின் சமாதுக்கு எதிரே தொண்டர்குல மக்களால் சமாது வைக்கப்பட்டுள்ளது. பின்னர் மணிகண்டனின் இரண்டு தந்தங்களை எடுத்து அருள் ஆனந்த செந்தில் விநாயகப் பெருமான் ஆலயத்தில் வைத்துத் தினமும் பூஜை நடைபெற்று வருகிறது.

சங்க காலத்தில் வழிபாட்டுக் களத்தில் தந்தத்தை நட்டு வழிபட்ட மரபு, இன்று வல்லநாட்டில் தந்தத்தையே நினைவுச் சின்னமாகப் பிரதிஸ்டை செய்து வழிபடும் மரபாகத் தொடர்கிறது.

## உடை

உடையை ஆடை, உடுப்பு என்கிறோம். ஆடை என்னும் தமிழ்ச்சொல்லுக்கு இலை என்னும் பொருள் உண்டு. இது அடகு அல்லது அடை என்ற சொல்லிலிருந்து தோன்றியது எனலாம். “இலை தழைகள், மரவுரியால் ஆன உடைகளைப் பழங்காலத்தில் உடுத்தியுள்ளனர். ‘தழையும் தாரும்’ தந்து தலைவன் தலைவியைக் களவு மணம் புரிந்த வழக்கத்தைச் சங்க அகப்பாடல் சுட்டுகிறது.” தமிழர்களின் பண்பாட்டு மரபில் உடையின் பங்களிப்பு அளப்பரியது.

இம்மரபின் தொடர்ச்சியாக, சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டு மரபில் தொண்டர்குல மக்கள் இன்றும் வெள்ளை மற்றும் பச்சை நிற ஆடையை அணிந்து வழிபாட்டினை நிகழ்த்துகின்றனர். இதில் வெள்ளை நிறம் தூய்மையையும், பச்சை நிறம் இயற்கையோடும் வாழ்வோடும் இணைந்த வளமையையும் குறிக்கிறது.

## கோயிலை அலங்கரித்தல்

தமிழர் வழிபாட்டு மரபில் கோயிலை அலங்கரித்தல் என்பது வெறும் அழகுபடுத்துதல் அன்று, அது ஒரு பண்பாட்டுச் சடங்கு. சாது சிதம்பர சுவாமிகளின் பூச நட்சத்திரம், குருபூஜை விழாவிற்கு ஒரு நாள் முன்பே, அருள் ஆறுதல் இல்லம், சுவாமிகளின் நினைவாலயம் மற்றும் அருள் ஆனந்த செந்தில் விநாயகப் பெருமான் ஆலயம் ஆகியவை தொண்டர் குல மக்களால் தூய்மைப்படுத்தப்படுகின்றன. பின்னர் கோயிலின் முன்பாக தென்னங்கீற்றுகளால் பந்தல் அமைத்தல், வாழை மரங்கள் கட்டுதல், பச்சை இலைதழைகளைக் கொண்டு சுற்றித் தடுப்பு அமைத்தல் மற்றும் தோரணம் கட்டுதல் போன்றவை முக்கிய இடம்பெறுகின்றன.

இங்கு பயன்படுத்தப்படும் தென்னங்கீற்று, வாழை, பச்சை இலைதழைகள் அனைத்தும் தமிழரின் இயற்கையோடு இயைந்த பண்பாட்டைக் காட்டுகின்றன. சாது சிதம்பர சுவாமிகள் வலியுறுத்திய இயற்கை சார்ந்த எளிய வாழ்வியல் நெறியின்படி, செயற்கை

அலங்காரங்களைத் தவிர்த்து, இயற்கைப் பொருட்களால் இறைவனை வரவேற்பதே தொண்டர்குல மக்களின் தனிச்சிறப்பாகும்.

### நெல்

தமிழர் பண்பாட்டில் நெல் என்பது வெறும் உணவுப் பயிர் மட்டுமன்று, அது வாழ்வின் அடையாளம். நெல் நன்செய் நிலத்தில் பயிர் செய்யப்படுகிறது. உணவுப் பயிர்களில் முதன்மையானதாகவும், உணவுப் பற்றாக்குறையைப் போக்கக் கூடிய தானியமாகவும் விளங்குகிறது. நெல் பொங்கும் பெரும்பயிர் என்பதைச் சங்க இலக்கியங்களும் தொல்காப்பியமும் எடுத்துக்காட்டுகின்றன. **'எல்லாப் பயிரானாலும் நெல்லுப்பயிர் செய்'**, **'உழுபுலத்தில் நெல் விதை'** போன்ற நாட்டுப்புறப் பழமொழிகள், நெல் பயிரின் இன்றியமையாமையை உணர்த்துகின்றன.

சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டில் நெல் புனிதப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. நவக்கிரக ஜோதி வழிபாடு, அமாவாசை ஜோதி வழிபாடு, குருபூஜை ஜோதி வழிபாடு போன்ற அனைத்து வழிபாடுகளிலும் கும்பம் ஏற்றப்படுகிறது. கும்பம் ஏற்றும்போது ஒரு வாழை இலையை விரித்து, அதன் மேல் நெல் குவிக்கப்பட்டு, அதன் மீது கும்பம் வைக்கப்படுகிறது. வாழை இலை மீது நெல் குவித்து கும்பம் வைப்பது வளமையைக் குறிக்கும் செயலாகும். இது சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டு முறைகளில் சிறப்பாக பின்பற்றப்படுகிறது.

### கேழ்வரகு

தமிழர்களுக்கு அடிப்படை உணவாக கேழ்வரகு இருந்துள்ளது. கேழ்வரகில் அதிகமான சத்துக்கள் இருப்பதை உணர்ந்த முன்னோர்கள் அதை விரும்பி உண்டுள்ளனர். கேழ்வரகில் மிகுந்த மருத்துவக் குணங்கள் உள்ளன. இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவையும் மூட்டுவலியையும் குறைக்கிறது. கேழ்வரகுக் கூழைக் குடிப்பதால் உடலுக்குக் குளிர்ச்சி ஏற்படுவதுடன், நீண்ட நேரம் பசி தாங்கும் ஆற்றலும் கிடைக்கிறது. இந்த உணவுப் பண்பாட்டின் தொடச்சியாக, சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டில் காலை வேளையில் கேழ்வரகுக் கூழ் பூஜை சிறப்பாக நடைபெறுகிறது. கேழ்வரகில் கூழ் காய்ச்சி ஜோதிக்குப் படைத்து, பின்னர் அது தொண்டர்குல மக்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகிறது.

### மஞ்சள் கிழங்கு

மஞ்சள் கிழங்கு நெருக்கமாக மண்ணுள் வளரக்கூடியது. மஞ்சள் உணவுக்கான துணைப்பொருளாகவும் மருந்துக்கான மூலப்பொருளாகவும் பயன்படுகிறது. சங்க காலம் முதல் தற்காலம் வரை மஞ்சள் பயன்பாடு இருந்து வருகிறது. சங்ககாலத்தில் இஞ்சியும் மஞ்சளும் சேம்பும் கூட்டுப்பயிராக வளர்ந்து வந்துள்ளன என்பதை **"சேம்பு மஞ்சளும் ஓம்பினர்" (கலி:3441)** என்ற அடி எடுத்துக்காட்டுகிறது.

**"மஞ்சள் ஆரோக்கியம் தொடர்பான ஒரு பொருளாகவே தமிழர் வாழ்வில் முன்பு இருந்துள்ளது. கிருமி எதிர்ப்புச் சக்தி, மஞ்சளில் உள்ளதாக நம்பப்படுகிறது."6 (2022:101)** சுவாமிகளின் வழிபாட்டில் மஞ்சள் படைக்கும் வழக்கமும் உண்டு. கும்பம் ஏற்றும்போது கும்பத்திற்குள் மஞ்சள் போடப்படுகிறது. மேலும் அமாவாசை ஜோதி, குருபூஜை ஜோதி வழிபாடுகளில் மஞ்சள் கலந்து நீரால் ஜோதிஸ்தம்பங்கள் அபிஷேகம்

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

செய்யப்படுகிறது. தொண்டர் குல மக்களுக்கு மஞ்சள் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

## முடிவுரை

சாது சிதம்பர சுவாமிகள் வழிபாடு என்பது வெறும் வழிபாட்டு முறை மட்டுமன்று, அது தமிழர் பண்பாட்டின் தொகுப்பாகும். இவ்வழிபாடு சங்க காலம் முதல் இருந்து வரும் முன்னோர் வழிபாடு மற்றும் நடுகல் எனும் நினைவுச் சின்ன வழிபாட்டின் தொடர்ச்சியாக விளங்குகிறது. யானை, பசு, நாகம், கருடன் போன்ற உயிர்களையும் மதிக்கும் தமிழரின் உயிர் நேயத்தைக் காட்டுகிறது. காலையில் நடைபெறும் கூழ் பூஜை, கேழ்வரகு போன்ற சிறுதானிய உணவு மரபை பாதுகாக்கிறது. கும்பத்தில் மஞ்சள் கிழங்கு இடுதல், மஞ்சள் நீர் அபிஷேகம் ஆகியவை மஞ்சளின் மருத்துவக் குணத்தைப் போற்றும் மருத்துவப் பண்பாடு ஆகும். வாழை இலையில் நெல்பரப்பி கும்பம் ஏற்றுவது வேளாண் பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்கிறது. உணவே மருந்து என்ற தமிழரின் அறிவியல் பார்வை இவ்வழிபாட்டில் தெய்வீக மரபாக மாறியுள்ளது.

நவீன காலப்போக்கில் மறைந்து வரும் தொன்மையான மரபுகள் பலவற்றை, சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாடு தன்னகத்தே தாங்கி உயிர்ப்புடன் பாதுகாத்து வருகிறது. எனவே, இவ்வழிபாடு காலத்தால் அழியாத வாழும் பண்பாட்டுப் பெட்டகமாகத் திகழ்கிறது என்பது இவ்வாய்வின் மூலம் உறுதி செய்யப்படுகிறது.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. செளந்திரராஜன்.கே.வி, இந்தியப் பண்பாடு, 1998, ப.115
2. முத்தையா.ஓ. பண்பாட்டுப் பதிவுகள், 2007, ப.120
3. சோமலெ, தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், 1981, ப.51
4. மேலது, ப.59
5. மேலது, ப.58
6. பரமசிவன்.தொ, பரண், சென்னை:ரிதம் வெளியீடு, 2022, ப.101

## துணைநூற் பட்டியல் (References)


1. சங்கரபாண்டியன்.வெ, வல்லநாட்டுச்சித்தர் சாது சிதம்பரசுவாமிகள் வரலாறு, சென்னை: மேடைமணி பதிப்பகம், 2010.
2. சோமலெ, தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், புது தில்லி: நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா, 1981.
3. செளந்திரராஜன்.கே.வி, இந்தியப் பண்பாடு, சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 1998.
4. பரமசிவன்.தொ, பரண், சென்னை:ரிதம் வெளியீடு, 2022
5. முத்தையா.ஓ. பண்பாட்டுப் பதிவுகள், சென்னை:காவ்யா பதிப்பகம், 2007.
6. வையாபுரிப்பிள்ளை.எஸ்., தமிழர் பண்பாடு, சென்னை: தமிழ்ப் புத்தகாலயம்,1958
   Reference Sankarapandiyan.V., Vallanaattu Chithar Saadhu Sithampara Swamigal Varalaru, Chennai: Medaimani Pathippagam, 2010. Somale, Tamilnaattu Makkalin Marabum Panpaadum, Puthu Delhi: National Book Trust India, 1981. Soundararajan.K.V., Indhiyap Panpaadu, Chennai: Manivasagar Pathippagam, 1998. Paramasivan.T., paran, Chennai: Rhythm Veliyeedu, 2022. Muthaiya.O., Panpaattup Pathivugal, Chennai: Kavya Pathippagam, 2007. Vaiyapuri Pillai.S., Tamizhar Panpaadu, Chennai: Tamil Puthakalayam, 1958.

© 2026 தங்கத்துரை சொ, முனைவர் .இலக்குவன் இரா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.
Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..